# பத்திரிக்கை செய்தி

நாள் : 20.07.2023

## நிலத்தின் புலப்பட நகல்கள் வழங்க ரூ.600/- லஞ்சம் பெற்ற தருமபுரி முனிசிபாலிட்டி டவுன் சர்வேயர் திரு.V.சுப்பிரமணியம் என்பவருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், வெள்ளிச்சந்தை கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம் மகன் திரு.V.M.பூபாலன் என்பவரது பூர்விகம் தருமபுரி பக்கமுள்ள அன்னசாகரம் கிராமமாகும். பல ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளிச்சந்தை வந்து நிரந்தரமாக வசித்து வருகிறார். இவரது நிலமும், இவரது பங்காளிகளின் நிலமும் அன்னசாகரத்தில் அருகருகே உள்ளது. இந்நிலையில், புகார்தாரர் திரு.V.M.பூபாலன் அவருக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டுவதற்கு வங்கியில் லோன் வாங்க வேண்டி அவரது நிலத்தின் புலப்பட நகலும் மற்றும் அவரது சித்தப்பா திரு.முருகேசன் பெயரில் உள்ள நிலத்தின் புலப்பட நகலும் கேட்டு கடந்த 12.06.2010, 14.06.2010 ஆகிய தேதிகளில் தருமபுரி முனிசிபாலிட்டி டவுன் சர்வேயர் திரு.V.சுப்பிரமணியம் அவர்களை சந்தித்து கேட்டபோது, ஒரு புலப்பட நகலுக்கு தலா ரூ.300/- வீதம் ரூ.600/- லஞ்சமாக கேட்டுள்ளார். அதன் பின்பு 15.06.2010-ம் தேதி சர்வேயர் சுப்பிரமணியத்தை சந்தித்து புலப்பட நகல்கள் கேட்டபோது பணம் ரூ.600/- இல்லாமல் கொடுக்க முடியாது என்று கூறியுள்ளார். இதனால் சர்வேயர் சுப்பிரமணியத்திற்கு ரூ.600/-ஐ இலஞ்சமாக கொடுத்து வேலையை முடிக்க விருப்பம் இல்லாத திரு.V.M.பூபாலன் அவர்கள் தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் சர்வேயர் திரு.V.சுப்பிரமணியம் மீது நடவடிக்கை எடுக்குமாறு 21.06.2010-ம் தேதி அன்று தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கொடுத்த புகாரின்பேரில், வழக்கு பதிவு செய்யப்பட்டு, தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த நடவடிக்கையின்போது 21.06.2010-ம் தேதி தருமபுரி முனிசிபாலிட்டி டவுன்

சர்வேயர் அலுவலகத்தில் வைத்து புகார்தாரர் திரு.V.M.பூபாலன் அவர்களிடமிருந்து ரூ.600/- அப்போதைய தருமபுரி முனிசிபாலிட்டி டவுன் சர்வேயர் திரு.V.சுப்பிரமணியம் அவர்கள் லஞ்சம் பெற்றபோது தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் அவர்களால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு விசாரணை தருமபுரி சிறப்பு நீதிபதி / முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில், விசாரணை முடிவுற்று இன்று 20.07.2023–ம் தேதி கனம் சிறப்பு நீதிபதி மற்றும் முதன்மை குற்றவியல் நடுவர் திரு.V.சுரேஷ் அவர்கள், வழக்கின் எதிரி திரு.V.சுப்பிரமணியம்_அவர்களுக்கு ஊழல் தடுப்பு சட்டம், 1988–ன்படி சட்ட பிரிவு 7-ன்கீழ் 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டணையுடன் அபராதம் ரூ.10,000/–மும், அபராதத்தொகை கட்ட தவறினால் 3 மாதம் சாதாரண தண்டணையும், பிரிவு 13(2)–ன் கீழ் 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டணையுடன் அபராதம் ரூ.10,000/- விதித்தும், அபராதத்தொகை கட்ட தவறினால் 3 மாதம் சாதாரண தண்டணையும் வழங்கியுள்ளார். (மொத்த அபராதத்தொகை ரூ.20,000/–) மேலும் இந்த தண்டனையை ஏக காலத்திற்கு அனுபவிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.